முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல: 34 (I)

எனது இல: DMS/A/08/21
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்,
பொதுத் திறைசேரி,
கொழும்பு – 01.
2009.06.01

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்,
நியதிச் சட்டமுறைச் சபைகள் மற்றும்,
முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான
கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

**அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டமுறைச் சபைகள்
மற்றும் முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின்
ஊழியர்களுக்கு இணைக் கொடுப்பனவு செலுத்துதல்**

2007.06.20 ஆம் திகதியுடைய 34 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

இல: 06/2006 கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர்களின் ஆரம்ப தரம், இரண்டாம் நிலைத் தரம் மற்றும் பதவியினர் தரம் எனத் தரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட முறைச் சபைகள் மற்றும் முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் ஊழியர்களைத் தரப்படுத்தல் மற்றும் அதன் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய இணைக் கொடுப்பனவு பின் வருமாறு இருத்தல் வேண்டும்.

| முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல: 34 இன் பிரகாரம் 09/2004 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள இணைக் கொடுப்பனவு | உரித்துடைய தரம் மற்றும் சம்பளத் தொகுதி | செலுத்தப்பட வேண்டிய இணைக் கொடுப்பனவு |
|---|---|---|
| ரூ. 175.00<br>200.00 | ஆரம்பத் தரம் பீ.எல்.(PL) 1,2,3 | ரூ. 350.00 |
| ரூ. 250.00 | இரண்டாம் தரம்<br>எம்ஏ (MA)<br>ஜேஎம் (JM) } சம்பளத் தொகுதி | ரூ. 400.00 |
| ரூ. 300.00 | பதவியினர் தரம்<br>எம்எம் (MM)<br>ஏஆர் (HM)<br>எச்எம் (HM) } சம்பளத் தொகுதி | ரூ. 500.00 |

மேலே திருத்தம் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் இச்சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதற்காக 2009 ஆம் ஆண்டிற்கு மேலதிக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படமாட்டாதென்பதுடன் நிலவுகின்ற ஒதுக்கீட்டு எல்லைக்குள் செலவினங்களை முகாமைத்துவம் செய்து கொள்ளல் வேண்டும்.
தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசின் பிரகாரம் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: **உதய ரஞ்சித் செனவிரத்ன**
திறைசேரிப் பிரதிச் செயலாளர்
திறைசேரிச் செயலாளருக்குப் பதிலாக.

பிரதிகள் :

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதம அமைச்சரின் செயலாளர்
3. செயலாளர், தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு
4. கணக்காய்வாளர் நாயகம்
5. வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம்.
6. அரசாங்க தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம்

} தகவலுக்காக